**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**
மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
ந.க. எண். 594 / c4 / Quality / 2020 நாள் : 12.2020

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – Specific Concept Oriented Programme (SCOPE) **2020–21 –** மாவட்ட அளவில் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நடத்துதல் – சார்பு.

பார்வை : திட்ட ஏற்பளிப்புக் குழு F.No. 28-2 / 2019 – IS 9, நாள் **15.07.2020** Quality Components SCOPE – Sl. No. 72 'e'.

******************

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் **2020–21** ஆம் கல்வி ஆண்டிற்கான திட்ட ஏற்பளிப்புக் குழுவின் நடவடிக்கைக் குறிப்பில் Quality Components என்ற தலைப்பின்கீழ் அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் Specific Concept Oriented Programme (SCOPE) என்ற திட்டத்தை ஒரு மாவட்டத்திற்கு **10** பள்ளிகள் வீதம் **32** மாவட்டங்களில் உள்ள **320** அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாவட்ட அளவில் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை **08.12.2020** அன்று நடத்த வேண்டும்.

**இத்திட்டத்தின் நோக்கம்**

- பாடத்திட்டத்தில் உள்ள கருப்பொருளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் திறமையை அதிகரித்தல்.
- அனைத்து மாணவர்களும் தங்களது பாடக் கருப்பொருளை உணர்ந்து கற்றலை உறுதிப்படுத்துதல்.
- மாணவர்களின் அறிவாற்றலை Projects, Assignments and Field Visits மூலம் வலுவூட்டுதல்.
- 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ப மாணவர்களிடம் சேர்ந்து கற்றல், தலைமைப் பொறுப்பு, பங்கேற்றல் மற்றும் மேம்படுத்துதல்.
- பாடத்தில் உள்ள கருப்பொருளை அன்றாட வாழ்வில் தொடர்புபடுத்தி மாணவர்களின் அறிவுத் திறனை வளர்ச்சியடைய செய்தல். பாடப்புத்தகத்திற்கு அப்பாற்பட்டு, புதிய சிந்தனை மற்றும் புதிய உத்திகளை பயன்படுத்தி ஆர்வத்தை தூண்டுதல் மற்றும் வளர்த்தல் ஆகும்.

**ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்:**

- பாடத்திட்டத்தில் உள்ள கருப்பொருளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் திறமையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.
- மாணவர்களின் அறிவாற்றலை Projects, Assignments and Field Visits மூலம் வலுவூட்டச் செய்ய வேண்டும்.
- 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ப மாணவர்களிடம் சேர்ந்து கற்றல், தலைமைப் பொறுப்பு, பங்கேற்றல் மற்றும் மேம்படுத்துதல் வேண்டும்.
- பாடத்தில் உள்ள கருப்பொருளை அன்றாட வாழ்வில் தொடர்புபடுத்தி மாணவர்களின் அறிவுத் திறனை வளர்ச்சியடைய செய்தல் வேண்டும்.
- பாடப்புத்தகத்திற்கு அப்பாற்பட்டு, புதிய சிந்தனை மற்றும் புதிய உத்திகளைப் பயன்படுத்தி ஆர்வத்தைத் தூண்டுதல் மற்றும் வளர்க்க செய்தல் வேண்டும்.
- மாணவர்கள் பள்ளியில் தனது பாடம் சார்ந்து செய்துணர் கற்றலை செய்முறையின் மூலம் அறியும் போது ஆசிரியர்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும். காணொலி காட்சி மற்றும் திட்ட அறிக்கையினை தயார் செய்தல் வேண்டும். மாணவர்களுக்கு பாடம் சார்ந்த புதிய கருத்தினை அவ்வப்போது மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

**பயிற்சியின் போது மாவட்டங்கள் மேற்கொள்ள வேண்டியவை :**

- மாநில திட்ட இயக்ககத்திலிருந்து நிதி விடுவிக்கப்பட்டவுடன் சார்ந்த பள்ளிகளுக்கு உடனே நிதியை விடுவித்து பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்த தெளிவான மற்றும் மாநில திட்ட இயக்ககத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் அடங்கிய முதன்மைக் கல்வி அலுவலரின் தனி செயல்முறைகள்(Proceedings) பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.
- ஒரு மாவட்டத்திற்கு 10 பள்ளிகள் வீதம் 32 மாவட்டங்களில் மொத்தம் 320 பள்ளிகளில் பணிபுரியும் கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வணிகவியல் மற்றும் பொருளியல் பாடங்களைச் சார்ந்த முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு (ஒரு பள்ளிக்கு, ஒரு பாடத்திற்கு ஒரு ஆசிரியர் வீதம் 7 பாடங்களில் 70 ஆசிரியர்களுக்கு) மாவட்ட அளவில் SCOPE திட்டம் சார்ந்த ஒரு நாள் பயிற்சி பாடவாரியாக ஏழு பாடங்களுக்கும் தனித்தனியாக மாவட்டங்களிலேயே வழங்குதல் வேண்டும்.

- இப்பயிற்சிக்கு கடந்த ஆண்டு மாநில கருத்தாளர்களாக செயல்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை அந்தந்த பாடத்திற்குக் கருத்தாளர்களாக செயல்படுமாறு அறிவுறுத்துதல் வேண்டும்.
- விடுவிக்கப்பட்ட நிதிக்கான முறையான பயன்பாட்டுச் சான்றிதழை பள்ளி திறந்த ஒரு வாரத்திற்குள் அனைத்து பள்ளிகளிடமிருந்து பெற்று மாநில திட்ட இயக்ககத்திற்கும் அனுப்புதல் வேண்டும்.

**மாவட்ட கல்வி அலுவலர்களுக்கான பொறுப்புகள் மற்றும் கடமைகள் :**

- மாவட்ட கல்வி அலுவலர்கள் தங்களது மாவட்டத்தில் கருத்தாளர் பயிற்சி நடைபெறுவதை உறுதி படுத்துதல் வேண்டும்.
- தற்போது கோவிட் –19 பெருந்தொற்று காரணமாக, ஒவ்வொறு பாடத்திற்கும் தனித்தனியே அறைகள் ஒதுக்கப்பட்டு , சமூக இடைவெளி பின்பற்றியும் கைகளை கிருமி நாசினிக்கொண்டு தூய்மை படுத்தியும், முகக் கவசம் அணிந்து ஆசிரியர்கள் வருவதை உறுதி செய்ய வேண்டும்.
- மேலும் பயிற்சியின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பறிக்கையினை MDO வாயிலாக தயாரித்து முதன்மைக் கல்வி அலுவலரிடம் சமர்பித்தல் வேண்டும். அதன் பின்னர் மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும்.
- EMIS Portal – இல் அனைத்து விவரங்களும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**மேற்பார்வையிடுதல்:**

- இது சார்ந்து DEO, BEO, ADPC/APO, BRTE அலுவலர்கள் மேற்பார்வையிட்டு அறிக்கைகள் தயார் செய்தல் வேண்டும்.
- அனைத்து அலுவலர்களும், முதன்மை கருத்தாளர் பயிற்சி ஆய்வு செய்யப்பட்டதை CEO உறுதி படுத்துதல் வேண்டும். இது சார்ந்த தொகுப்பறிக்கையினை மாவட்டத்தில் தொகுக்கப்பட வேண்டும். தேவையின் அடிப்படையில் மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

இப்பயிற்சியினை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் மேற்குறிப்பிட்டுள்ளவாறு **08.12.2020** அன்று தத்தமது மாவட்டங்களில் நடத்திடுமாறும், பயிற்சியினை மாவட்டத் திட்ட கள அலுவலர்கள் (ADPC / APO / EDC / DC / MDO / BRTE) ஒருங்கிணைந்து நடத்தி, புகைப்படத்துடன் கூடிய தொகுப்பறிக்கையை இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறும் அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : மாவட்ட வாரியான நிதி விடுவிப்பு பட்டியல்

கூடுதல் மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர் : அனைத்து மாவட்டத்திட்ட ஒருங்கிணைப்பாளர் / முதன்மைக் கல்வி அலுவலர்